தமிழ்நாடு அரசு

# புத்தாக்கப் பயிற்சிக் கட்டகம்
# 2021–2022

# 7

# தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

## பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| | அடிப்படை மொழித்திறன்கள் | 1–16 |
| 1. | மூவிடப்பெயர்களை அறிந்து கொள்ளுதல் | 17 |
| 2. | சொற்றொடர் அமைப்பு முறை அறிதல் | 21 |
| 3. | அகராதி பயன்படுத்தும் திறன் பெறுதல் | 24 |
| 4. | செய்யுளைப் பிழையின்றிச் சரியான ஒலிப்புடன் படித்தலும் நயம் பாராட்டுதலும் | 27 |
| 5. | பல்வேறு வகையான மரபுச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல் | 30 |
| 6. | தொழிலையும் பண்பாட்டையும் உணர்த்தும் சொற்களை அறிதல் | 35 |
| 7. | அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவியின் இலக்கண நுட்பங்கள் அறிதல் | 38 |
| 8. | மரபுத்தொடரைப் பொருள் அறிந்து பயன்படுத்துதல் | 41 |
| 9. | தமிழ் படைப்பாளர்கள், அவர்தம் படைப்புகள் குறித்துப் பேசுதல் | 44 |
| 10. | கதையினைக் கேட்டு விளக்கம் அளித்தல் / பேசுதல் திறன் வளர்த்தல் | 48 |
| 11. | பண்பியல் திறன்களை மேம்படுத்துதல் | 51 |
| 12. | நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தும் திறன் பெறுதல் | 55 |
| 13. | பத்தியைப் படித்து வினாக்களுக்கு வினா உருவாக்குதல் விடையளித்தல் | 59 |
| 14. | சூழலைக் கேட்டுப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் | 63 |
| 15. | மயங்கொலிச் சொற்களைப் பொருள் வேறுபாடு அறிந்து பயன்படுத்துதல் | 67 |
| 16. | முழக்கத்தொடர் உருவாக்குதல் | 72 |

# அடிப்படை மொழித்திறன்கள்

## எழுத்துகளை அறிதல்

திறன் : எழுதுதல் திறன்

நோக்கம் : எழுத்துகளை நினைவூட்டடல்

### ஆசிரியர் செயல்பாடு

ஒலிவடிவாக எழுப்பப்படுவதும் வரிவடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது. தமிழ் எழுத்துகள் மொத்தம் 247 ஆகும்.

### உயிரெழுத்துகள் (12)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

| குறில் எழுத்துகள் (5) | நெடில் எழுத்துகள் (7) |
|---|---|
| அ, இ, உ, எ, ஒ | ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ |

### மெய்யெழுத்துகள் (18)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க், ச், ட், த், ப், ற் | ங். ஞ், ண், ந், ம், ன் | ய், ர், ல், வ், ழ், ள் |

### உயிர்மெய் எழுத்து வாய்பாடு

(எ.கா.) 'க' – வரிசை

க் + அ = க
க் + ஆ = கா
க் + இ = கி
க் + ஈ = கீ

க் + உ = கு
க் + ஊ = கூ
க் + எ = கெ
க் + ஏ = கே

க் + ஐ = கை
க் + ஒ = கொ
க் + ஓ = கோ
க் + ஔ = கௌ

| ஆய்த எழுத்து (1) | ஃ | எஃகு<br>அஃது |
|---|---|---|

### உயிர்மெய் எழுத்துகள் (216)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## மாணவர் செயல்பாடு

**அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கடிகாரத்தில் உயிர் நெடில் எழுத்துகளை எடுத்தெழுதுக.**
**(ஓ, ஏ, ஆ, ஊ, ஔ, ஈ, ஐ)**



ஆ) கட்டங்களில் விடுபட்ட எழுத்துகளை நிரப்புக.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | | இ | | உ | | எ | | ஐ | | ஓ | |
| க் | க | | கி | | கு | | கெ | | கை | | கோ | |
| | | ஙா | | ஙீ | | ஙூ | | ஙே | | ஙொ | | ஙௌ |
| | ச | | சி | | சு | | செ | | சை | | சோ | |
| | | ஞா | | ஞீ | | ஞூ | | ஞே | | ஞொ | | ஞௌ |
| | ட | | டி | | டு | | டெ | | டை | | டோ | |
| ண் | | ணா | | ணீ | | ணூ | | ணே | | ணொ | | ணௌ |
| | த | | தி | | து | | தெ | | தை | | தோ | |
| | | நா | | நீ | | நூ | | நே | | நொ | | நௌ |
| | ப | | பி | | பு | | பெ | | பை | | போ | |
| | | மா | | மீ | | மூ | | மே | | மொ | | மௌ |
| ய் | ய | | யி | | யு | | யெ | | யை | | யோ | |
| | | ரா | | ரீ | | ரூ | | ரே | | ரொ | | ரௌ |
| | ல | | லி | | லு | | லெ | | லை | | லோ | |
| | | வா | | வீ | | வூ | | வே | | வொ | | வௌ |
| | ழ | | ழி | | ழு | | ழெ | | ழை | | ழோ | |
| ள் | | ளா | | ளீ | | ளூ | | ளே | | ளொ | | ளௌ |
| | ற | | றி | | று | | றெ | | றை | | றோ | |
| | | னா | | னீ | | னூ | | னே | | னொ | | னௌ |

இ) அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை உரிய கட்டத்தில் நிரப்புக.

(க், ங், ச், ஞ், ட், ண். த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்)

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

ஈ) பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறில், உயிர் நெடில், மெய்யெழுத்து, உயிர்மெய்க்குறில், உயிர்மெய் நெடில் எழுத்துகளை எடுத்து எழுதுக.

| | உயிர்க் குறில் | உயிர் நெடில் | மெய் | உயிர்மெய்க் குறில் | உயிர்மெய் நெடில் |
|---|---|---|---|---|---|
| (எ.கா) அரண்மனை | அ | – | ண் | ம, ர | னை |
| ஒருமை | | | | | |
| செம்மொழி | | | | | |
| கொடுநோய் | | | | | |
| மற்றொன்று | | | | | |
| மூவேந்தர் | | | | | |

# சொற்களை உருவாக்குதல்

திறன் : சொற்களஞ்சியப் பெருக்கம்



நோக்கம் : சொல் அமைத்தலை நினைவுகூர்தல்

**ஆசிரியர் செயல்பாடு**

ஓர் எழுத்தோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட எழுத்துகளோ சேர்ந்து நின்று பொருள் தருவது சொல் எனப்படும்.

**(எ.கா.)** பூ, ஆடு, குதிரை, பட்டம்

**மாணவர் செயல்பாடு:**

| | |
|---|---|
| அ) ஈரெழுத்துச் சொற்களை உருவாக்குக.<br><br> | 1. ____________<br>2. ____________<br>3. ____________<br>4. ____________<br>5. ____________ |
| ஆ) மூன்றெழுத்துச் சொற்களை உருவாக்குக.<br><br> | 1. ____________<br>2. ____________<br>3. ____________<br>4. ____________<br>5. ____________ |

**இ) இருவழிச் சொல் எழுதுக.**

(வி, ள, கை, மே, கு, தே, சே) (எ.கா.) __ கடக__ (வி க ட க வி)

| | | |
|---|---|---|
| 1. ____ரே____ | 2. ____க____ | 3. _____ர அர____ |
| 4. _____டா_____ | 5. _____ட_____ | 6. மே ------ தா .....<br>மே |





ஈ) அந்தாதிச் சொற்களால் (சொல்லின் இறுதி எழுத்து அடுத்த சொல்லின் முதல் எழுத்தாக வருவது) தேனீக்கு வழிகாட்டுங்கள்.



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | | | | து | | தி |
| | | | | | | |
| வை | | சி | | வி | | மை |
| | | | | | | |
| | | மி | | கு | | ம் |



உ) படங்களை இணைத்துப் பெயர்களைக் கண்டுபிடித்து உரிய கட்டத்தில் எழுதுக.

| | |
|---|---|
|   | ------------------------ |
|   | ------------------------ |
|   | ------------------------ |
|   | ------------------------ |
|   | ------------------------ |

# சொற்களை அகர வரிசையில் எழுதுதல்

திறன் : படித்தல், எழுதுதல்

நோக்கம் : எழுத்துகளின் வரிசையினை நினைவூட்டல்

**ஆசிரியர் செயல்பாடு :**

தமிழ் எழுத்துகளின் அட்டவணையில் உள்ள எழுத்துகளை அ முதல் ஔ வரை அகர வரிசைப்படி படித்து நினைவுகூர்ந்து எழுதுதல்.

(எ.கா.) க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ.

கணினி, காற்றாடி, கிளிஞ்சல், கீரை, குடை, கூடை, கெண்டைமீன், கேழ்வரகு, கைப்பை, கொடி, கோழி, கௌதாரி.

**மாணவர் செயல்பாடு**

**அ) இப்படத்தினுள் உள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி எடுத்து எழுதுக.**



1. ________________  7. _______________

2. ________________  8. _______________

3. ________________  9. _______________

4. ________________  10. ______________

5. ________________  11. _______________

6. ________________  12. _______________

அ) அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட மெய்யெழுத்துகளில் சரியானதைத் தேர்ந்தெடுத்துக் கட்டங்களில் விடுபட்ட இடங்களை நிரப்புக.

(க், ஞ், ட், ந், ம், ர், ல், ள், ற், ன்)

| | | | |
|---|---|---|---|
| ம | | ச | ள் |
| ப | | த | ல் |
| ம | | க | ள் |
| தே | | கூ | டு |
| வ | | ள | ல் |

| | | | |
|---|---|---|---|
| ஆ | | வ | ம் |
| ப | | ட | ம் |
| ஒ | | று | மை |
| செ | | ம | ண் |
| ந | | வி | னை |

ஆ) மேலே கட்டத்தில் நிரப்பிய சொற்களை இரண்டாம் எழுத்தின் (மெய்யெழுத்து) அடிப்படையில் வரிசைப்படுத்தி எழுதுக.

| | |
|---|---|
| 1.__________________ | 6.__________________ |
| 2.__________________ | 7.__________________ |
| 3.__________________ | 8.__________________ |
| 4.__________________ | 9.__________________ |
| 5.__________________ | 10.__________________ |

# இரட்டைச்சொற்கள் அறிதல்

திறன் : எழுதுதல்

நோக்கம் : அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி – நினைவூட்டல்

## ஆசிரியர் செயல்பாடு

### இரட்டைக் கிளவி (கிளவி – சொல்)

இரட்டையாக இணைந்து வந்து பிரித்தால் பொருள் தராத சொற்கள் இரட்டைக்கிளவி எனப்படும்.

| | |
|---|---|
| (எ.கா.) கலகல | சிறுவர்கள் கலகலவெனச் சிரித்தனர். |
| (எ.கா.) பளபள | புதிய குடம் பளபளவென மின்னியது. |

### அடுக்குத்தொடர்

ஒரே சொல் இரண்டுமுறை அடுக்கிவந்து பொருள்தருவது அடுக்குத்தொடர் எனப்படும். இது மூன்று, நான்கு முறைகூட அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தரும்.

| | |
|---|---|
| (எ.கா.) மெல்ல மெல்ல | நத்தை மெல்ல மெல்ல நகர்ந்து செல்கிறது. |
| (எ.கா.) வாழ்க வாழ்க | மணமக்களை வாழ்க வாழ்க என்று வாழ்த்தினர். |

## மாணவர் செயல்பாடு

அ) கொடுக்கப்பட்டுள்ள இரட்டைச் சொற்களில் இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் எவை எவை எனக் கண்டுபிடித்து எடுத்து எழுதுக .

கமகம கடகட சலசல

ஓடிஓடி மடமட வந்து வந்து

வருகவருக செல்செல்

குறுகுறு

துள்ளித்துள்ளி கொழுகொழு

குதித்துக்குதித்து

| இரட்டைக்கிளவி | | அடுக்குத்தொடர் | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

ஆ) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் இருந்து சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக .

(மடமட, சடசட, எழுதஎழுத , நெடுநெடு, பளீர்பளீர், கமகம)

1. எங்கள் ஊரில் ______________ என வளர்ந்த பனைமரம் உள்ளது.

________________

________________

2. பயிற்சி ஏட்டில் ____________ கையெழுத்து அழகாக மாறியது.

________________

________________

3. மல்லிகை ____________என நறுமணம் பரப்பியது.

________________

________________

4. மரக்கிளை ___________என முறிந்தது.

________________

________________

5. மழை ____________ எனப் பெய்தது.

________________

________________

6. மின்னல் ____________ என மின்னியது.

________________

________________

# திணை மற்றும் பால் வகைகள் அறிதல்

திறன் : எழுதுதல்

நோக்கம் : திணை மற்றும் பால் வகைகள் – நினைவூட்டல்

**ஆசிரியர் செயல்பாடு**

திணை என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருளாகும். பகுத்தறியும் திறன் கொண்ட மக்கள், தெய்வம் உயர்திணை எனவும் மற்ற அனைத்தும் அஃறிணை எனவும் இருவகைப்படுத்தப்படும்.

பால் என்பதற்குப் பகுப்பு அல்லது பிரிவு என்று பொருள். பால் ஐந்து வகைப்படும். அவற்றில் உயர்திணைக்கு உரியவை ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகும். அஃறிணைக்கு உரியவை ஒன்றன்பால், பலவின்பால் ஆகும்.

**மாணவர் செயல்பாடு**

**அ) பின்வரும் சொற்களை வகைப்படுத்துக.**

(அரசி, மாமரம், மலர்விழி, எழுதுகோல், கோவலன், கடிகாரம், மருத்துவர், சங்கு, மாணவர், கரும்பலகை, ஆசிரியர், மேசை)

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

**ஆ) பின்வரும் சொற்பட்டியலில் உள்ள சொற்களை வகைப்படுத்தி அட்டவணையில் நிரப்புக.**

மாணவி, மாணவன், ஆசிரியை, வீடுகள், முருகன், பூ, மலர்கள், எருது, விண்மீன்கள், அவர்கள், பாடகி, சிறுவர்கள், பனைமரம், வாக்காளர்கள், உழவன்

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

# மூவிடங்கள் மற்றும் காலங்கள் அறிதல்

திறன் : எழுதுதல் திறன்

நோக்கம் : மூவிடங்கள் மற்றும் காலங்கள் – நினைவூட்டல்

### ஆசிரியர் செயல்பாடு

**மூவிடங்கள் :**

தன்னைக் குறிப்பது, தன்மை எனப்படும். முன்னால் இருப்பவரைக் குறிப்பது, முன்னிலை எனப்படும். இவ்விருவரையும் தவிர மற்றவற்றை/மற்றவர்களைக் குறிப்பது, படர்க்கை எனப்படும். அவை,

- தன்மை – நான், நாம், நாங்கள்
- முன்னிலை – நீ, நீவீர், நீங்கள்
- படர்க்கை – அவை, அவர், அவன், அவள், அது – ஆகும்.

**காலங்கள் :**

செயல் நிகழும் நேரத்தைக் காலம் என்பர். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என காலம் மூன்று வகைப்படும்.

- செயல் நடந்து முடிந்ததைக் கூறுவது இறந்தகாலம். (எ.கா.) படித்தார்.
- செயல் நடந்துகொண்டிருப்பதைக் கூறுவது நிகழ்காலம். (எ.கா.) படிக்கின்றார்.
- செயல் நடக்கப் போவதைக் கூறுவது எதிர்காலம். (எ.கா.) படிப்பார்.

### மாணவர் செயல்பாடு

| அ) தன்மைச் சொற்களை வட்டமிடுக. | ஆ) முன்னிலைச் சொற்களை வட்டமிடுக. |
|---|---|
| நான் பாடுகின்றேன். | நீ எங்குப் படிக்கிறாய்? |
| நாம் அனைவரும் சமம். | நீங்கள் பயிலும் வகுப்பு எது? |

| இ) படர்க்கைச் சொற்களை வட்டமிடுக. | ஈ) விடுபட்ட இடங்களை நிரப்புக. |
|---|---|
| மாணவர்கள் விளையாடுகிறார்கள். | ________ எழுது. |
| பறவை முட்டை இட்டது. | ________ உன் எழுதுகோலா? |

உ) நிரப்புக.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| ஆசிரியர் | | வருகிறார் | |
| நீங்கள் | படித்தீர்கள் | | |
| நான் | | | விளையாடுவேன் |

# ஒருமை, பன்மை அறிதல்

திறன் : திறன் – நடைமுறை இலக்கணம்

நோக்கம் : ஒருமை, பன்மை விகுதிகள் அறிந்து சொற்களைச் சரியாகப் பயன்படுத்துதலை நினைவுகூர்தல்

**ஆசிரியர் செயல்பாடு:**

ஒரு பொருளை மட்டும் குறிப்பது ஒருமை.

ஒன்றிற்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

**பன்மை விகுதிகள்:**

| ஒருமை | விகுதிகள் | பன்மை |
|---|---|---|
| இலை | கள் | இலைகள் |
| ஈ | க்கள் | ஈக்கள் |
| மரம் | ( ம்–ங்) கள் | மரங்கள் |
| கல் | (ல்–ற்) கள் | கற்கள் |
| முள் | (ள்–ட்) கள் | முட்கள் |

**மாணவர் செயல்பாடு:**

உரிய விகுதிகள் சேர்த்துப் பன்மையாக மாற்றுக.

| | | | |
|---|---|---|---|
| கை | | பூ | |
| இலை | | பசு | |
| ஆமை | | பழம் | |
| பூனை | | சிங்கம் | |
| சொல் | | முள் | |
| புல் | | ஆள் | |

# வினாச்சொற்கள் அறிதல்

திறன் : நடைமுறை இலக்கணம்

நோக்கம் : வினாச்சொற்கள் தொடரில் அமைவதை நினைவூட்டல்

**ஆசிரியர் செயல்பாடு**

வினா எழுப்பும் பொருளில் வருவது வினாச்சொல் ஆகும்.

- எ, யா, ஆ, ஓ, ஏ ஆகியன வினா எழுத்துகளாக வரும்.
- என்ன, எவை, ஏன், எப்படி, எது, எப்பொழுது, எங்கு, எவ்வாறு, எத்தனை, யார், யாது, எதை, யாவர், எவ்வளவு என்பன வினாச் சொற்களாகும்.
- வினாச்சொல் அமையும் தொடரின் இறுதியில் வினாக்குறி (?) இடுவது அவசியம்.

(எ.கா.)

- சொல் என்பதன் பொருள் யாது?
- நீ ஏன் சென்றாய்?
- காந்தியடிகள் எதை வலியுறுத்தினார்?
- இலக்கணம் என்றால் என்ன?
- போட்டியில் எத்தனை பேர் பங்கேற்றார்கள்?
- உன் தாய்மொழி எது?

**மாணவர் செயல்பாடு**

**விடுபட்ட இடத்தில் தகுந்த வினாச்சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.**

1. அவர் __________ வரவில்லை? __________ காரணம்?
2. யாழினி __________ சென்றாள்? __________ வருவாள்?
3. இன்று __________ மாணவர்கள் வருகை புரிந்தனர்?
4. உன்னுடைய ஊர்ப்பெயர் __________?
5. குறில் எழுத்துகள் __________?
6. உன்னுடைய நண்பன் __________?
7. மெய்ப்பொருள் என்பதன் பொருள் __________?

# பெயர்ச்சொல், வினைச்சொல் அறிதல்

திறன் : நடைமுறை இலக்கணம்

நோக்கம் : பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றை நினைவுகூர்தல்

## ஆசிரியர் செயல்பாடு

### பெயர்ச்சொல்

பெயரைக்குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

(எ.கா.) கண்ணன் நன்கு பேசினான்.

மா, பலா, வாழை என்பன முக்கனிகள்.

வண்ணமிட்ட சொற்கள், பெயர்ச்சொற்கள் ஆகும்.

### வினைச்சொல்

ஒரு செயல் அல்லது தொழிலைக் (வினையைக்) குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

ஓடினான், நடந்தான், பேசினாள், ஆடினாள், பறந்தன, மேய்ந்தது – அனைத்தும் வினைச்சொற்கள் ஆகும்.

(எ.கா.) கட்டுரை நன்றாக எழுதினான்.

ஓவியம் அழகாக வரைந்தாள்.

## மாணவர் செயல்பாடு

கீழக்காணும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்களைக் கண்டறிந்து பட்டியலிடுக.

1. செங்கண்ணன் செய்தித்தாள் படித்தான்.
2. இனியவள் பாடல் பாடினாள்.
3. வாத்துகள் முட்டைகளை உடைத்தன.

| வ.எண் | பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

# தொடர் அமைப்பு அறிதல்

திறன் : நடைமுறை இலக்கணம்
நோக்கம் : எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை நினைவுகூர்தல்

## ஆசிரியர் செயல்பாடு

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர் ஆகும். ஒரு தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இருக்கும்.

எழுவாயோ, செயப்படுபொருளோ இல்லாமலும் தொடர் அமையலாம். ஆனால் பயனிலை அவசியம் இடம்பெற்று இருக்கும்.

| | | |
|---|---|---|
| எழுவாய் | செயலைச் செய்தவரைக் குறிப்பது எழுவாய் ஆகும். இது, பெயர்ச்சொற்களாக அமையும். | (எ.கா.) பைந்தமிழ் திருக்குறள் படித்தாள் – என்பதில் பைந்தமிழ் என்பது எழுவாய். |
| பயனிலை | எழுவாய் செய்யும் செயலைக் குறிப்பது பயனிலை ஆகும். | (எ.கா.) பைந்தமிழ் திருக்குறள் படித்தாள் – என்பதில் படித்தாள் என்பது பயனிலை. |
| செயப்படு பொருள் | எழுவாய் ஒரு செயலைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள், செயப்படுபொருள் எனப்படும். | (எ.கா.) பைந்தமிழ் திருக்குறள் படித்தாள் – என்பதில் திருக்குறள் என்பது செயப்படுபொருள். |

## மாணவர் செயல்பாடு

அ) கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைக் கண்டறிந்து எழுதுக.

1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதினார்.
2. பசு பாலைத் தருகிறது.
3. உழவன் வயலை உழுதார்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

ஆ) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமையுமாறு சொற்றொடர்கள் நான்கினை எழுதுக.

1. ____________________________________________
2. ____________________________________________
3. ____________________________________________
4. ____________________________________________

# 1 மூவிடப்பெயர்களை அறிந்து கொள்ளுதல்

**கற்றல் விளைவு:**

மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

ஒரு கருத்து குறித்து இருவர் பேசுவது உரையாடல் எனப்படும். இங்கே ஆசிரியரும் ராமுவும் பேசும் உரையாடலைப் படிக்கலாம்.

ஆசிரியர் : ராமு, நீ நலமா? விடுமுறையில் எங்குச் சென்றாய்?

ராமு : நான் நலம் ஐயா, நாங்கள் விடுமுறையில் குடும்பத்துடன் எங்கள் பாட்டியின் வீட்டிற்குச் சென்றோம்.

ஆசிரியர் : நீங்கள் அங்கு என்னவெல்லாம் செய்தீர்கள்?

ராமு : பாட்டி வீட்டில் உள்ள தோட்டத்திற்குச் சென்றோம். அங்கு ஆடு, மாடு, கோழி, நாய் போன்றவற்றைப் பார்த்தோம். அவை அனைத்துடனும் நான் மகிழ்ச்சியோடு விளையாடினேன். ஐயா!

இவ்வுரையாடலில் நீ, நான், நாங்கள், நீங்கள், அவை, நான் என்னும் பெயர்கள் வந்துள்ளன அல்லவா? இப்பெயர்கள் மூவிடங்களில் வரும் முறை பற்றித் தெரிந்து கொள்ளலாம். மூவிடங்கள், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகும்.

- தன்மை – தன்னைக் குறிப்பது.
- முன்னிலை – முன்னால் இருப்பவரைக் குறிப்பது.
- படர்க்கை – இவ்விருவரையும் தவிர மற்றவற்றை / மற்றவர்களைக் குறிப்பது.

1. தன்மைப் பெயர்கள்: நான், யான், யாம், நாம், நாங்கள்.

2. முன்னிலைப் பெயர்கள்: நீ, நீர், நீவிர், நீங்கள்.

3. படர்க்கைப் பெயர்கள்: அவன், அவள், அவர், அது, அவை.

### மூவிடப்பெயர்களில் ஒருமை, பன்மை

1. தன்மை ஒருமை: யான், நான்.

   எ.கா. நான் பேசினேன்.

2. தன்மைப் பன்மை: நாம், யாம், நாங்கள்.

   எ.கா. நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்.

3. முன்னிலை ஒருமை: நீ

   எ.கா. நீ என்ன செய்தாய்?

4. முன்னிலை பன்மை; நீர், நீங்கள், நீவிர், நீயிர்.

   எ.கா. நீங்கள் பார்த்தீர்களா?

5. படர்க்கை ஒருமை: அவன், அவள், அது.

   எ.கா. அவள் நடனம் ஆடினாள்.

6. படர்க்கை பன்மை: அவை.

   எ.கா. அவை நீந்தின.

## மதிப்பீட்டுச் செயல்பாடு

**மேலே கற்றவற்றை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் செயல்பாடுகளைச் செய்வோமா?**

**1. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

நான் கடைக்குச் சென்றேன்.

__________ கடைக்குச் சென்றோம். (நாங்கள் / யான்)

_____________________________________________

2. இடப்பெயர்களின் வகைகளை வட்டமிடுக.

பெயரெச்சம், தன்மை, படர்க்கை, ஓடினான் , வினையெச்சம், முன்னிலை

_____________________________________________

3. அடிக்கோடிட்டச் சொல்லின் இடப்பெயரை எழுதுக.

நீங்கள் நேற்று கோயிலுக்குச் சென்றீர்களா?

_____________________________________________

_____________________________________________

**4. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

ராணி பள்ளிக்கு வந்தாள். <u>அவள்</u> தோழிகளுடன் விளையாடினாள்.

இத்தொடரில் அவள் என்பது ____________ இடத்தைக் குறிக்கிறது.

_____________________________________________

**5. ஒருமைக்கேற்ற பன்மையுடன் பொருத்துக.**

அ. நான் – அவை

ஆ. நீ – நாங்கள்

இ. அது – நீங்கள்

_____________________________________________

6. **பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களைப் பொருத்தமான கட்டத்தில் எழுதுக.**

1. தாய் தந்தையரை <u>நாம்</u> மதித்து வாழவேண்டும்.
2. <u>யாம்</u> பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.
3. தாயே <u>நீ</u> அருள் புரிவாய்.
4. <u>அவர்கள்</u> சமாதானத்தின் முன்னோடிகள்.
5. <u>அவர்</u> சிறந்த பாடகர்.
6. <u>அவள்</u> நற்குணம் உடையவள்.
7. <u>நீங்கள்</u> பாட்டுப்பாடி ஆடுங்கள்.
8. <u>நான்</u> ஒரு சமாதானப் பிரியன்.
9. <u>நீவிர்</u> கடமையைச் சரியாக செய்வீர்கள்.
10. <u>நீர்</u> வீட்டிற்குச் சென்று மாலையில் என்ன செய்வீர்?

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

# 2 சொற்றொடர் அமைப்பு முறை அறிதல்

**கற்றல் விளைவு :**

மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

சொற்கள் தொடர்ந்து வருவதைத் தொடர் என்பர். தொடரில் உள்ள கூறுகளான எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை இப்பாடலின்வழி அறியலாமா?

**இலக்கணப் பாடல்**

எழுவாய் பயனிலை செயப்படு பொருள்,

இணைந்தது சொற்றொடர் தானே!

எழுவாய் என்பது பெயர்ச்சொல்லே,

அதுவே சொல்லின் முதற்சொல்லே!

பயனிலை என்பது வினைமுற்றே,

அதுவே சொல்லின் கடைச்சொல்லே!

செயப்படு பொருள் என்பது வினாவின் விடையே,

அதுவே சொல்லின் நடுச்சொல்லே!

எழுவாய் செயப்படு பொருளும் தொடரில்

இல்லாமல் வருமே;

பயனிலை இருந்தால்தான் தொடரில்

பொருள் வருமே.

**விளக்கம்:**

- ஒரு தொடரில் யார், எது, எவை, யாவர் என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் எனப்படும். எழுவாய் எப்போதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும். (எ.கா.) தென்றல் ஓவியம் வரைந்தாள்.
- ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படுபொருள் ஆகும். (எ.கா.) தென்றல் ஓவியம் வரைந்தாள்.
- ஒரு தொடரில் அமைந்துள்ள வினைமுற்றையே பயனிலை என்கிறோம். (எ.கா.) தென்றல் ஓவியம் வரைந்தாள்.
- சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இடம்பெறும். (எ.கா.) கந்தன் பாடம் படித்தான்.
- எழுவாய் அல்லது செயப்படுபொருள் இல்லாமலும் தொடர் அமையலாம்.(எ.கா.) 1. பாடம் படித்தான் 2. கந்தன் படித்தான்.

**மாணவர் செயல்பாடு: வண்ண மையினால் அடிக்கோடிடுக.**

(எழுவாய் – சிவப்பு; பயனிலை – பச்சை; செயப்படுபொருள் – மஞ்சள்)

1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
2. பூவழகி வீணையை மீட்டினாள்.
3. முருகன் உணவு உண்டான்.
4. வளவன் உண்டு உறங்கினான்.
5. குரங்கு மரத்தில் ஏறியது.

**மதிப்பீட்டுச் செயல்பாடு:**

பத்தியைப் படித்து அதில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் சொற்களைக் கட்டங்களில் எடுத்து எழுதுக.

கோபால் காலையில் எழுந்தான். காலைக் கடன்களை முடித்தான். நண்பர்களுடன் பள்ளிக்குச் சென்றான். வகுப்புத் தோழர்களுடன் கலந்துரையாடினான். ஆசிரியர் நடத்திய பாடத்தைக் கவனித்தான். ஆசிரியர் கேட்ட வினாக்களுக்கு விடையைக் கூறினான். மதிய உணவு உண்டான். மாலை வகுப்புகள் முடிந்து வீட்டிற்கு வந்தான். சிறிதுநேரம் தன் நண்பர்களுடன் விளையாடினான். வீட்டுப்பாடங்களைச் செய்துமுடித்தான். இரவு உணவு உண்ட பின் உறங்கினான்.



| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
| --- | --- | --- |
| | | |
| | | |
| | | |
| | | |

# 3 அகராதி பயன்படுத்தும் திறன் பெறுதல்

**கற்றல் விளைவு :**

சொற்களின் பொருளை அகராதிகளில் கண்டறிதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

கீழ்க்காணும் நாட்டுப்புறப் பாடலைப் படிக்கலாம். இப்பாடலில் அமைந்துள்ள அருஞ்சொற்களின் பொருளை அறிவோமா?

**மரம்**

தாத்தன் பூட்டன் வச்ச மரம்
தண்மையைத் தான் தந்திடுதே

அத்தை மாமா நட்டமரம்
அழகாய்த் தான் நிழல் தருதே



மாமன் மச்சான் விதைச்ச மரம்
மருந்தாகத்தான் பயன்படுதே

தம்பிமார் வச்ச மரம்
தண்மாரி பொழிந்திடுமே

உறவுகள் எல்லாம் வளர்த்தமரம்
உயிர்வளியை வழங்குதுவே

வீட்டச் சுத்தி வச்ச மரம்
வீடு கட்ட உதவுதுவே

இதையெல்லாம் மறந்ததாலே
இன்னல் பல விளைந்திடுமே

மாண்புறவே வாழ்வதற்கே – நாமும்

மரத்தைத்தான் நடுவோமுங்க

## சொல்லும் பொருளும்

1. தாத்தன் – அப்பாவின் அப்பா
2. அத்தை – அப்பாவின் உடன்பிறந்தவள் அல்லது மாமாவின் மனைவி
3. விதைத்த – விதை ஊன்றி உருவாக்கிய
4. தண்மாரி – குளிர்ந்தமழை
5. உயிர்வளி – நாம் சுவாசிக்கும் பிராண வாயு (ஆக்சிஜன்)
6. இன்னல் – துன்பம்
7. நடுவோம் – மரத்தை நட்டு வைப்போம்

## மதிப்பீட்டுச் செயல்பாடு:

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அப்பாவின் அப்பாவை ___________ என்று அழைப்போம்.

2. மாரியின் வேறுபெயர் ____________ எனப்படும்.

3. நாம் பிறருக்கு இன்னல் தரக்கூடாது. – இவ்வாக்கியத்தில் 'இன்னல்' என்பதன் பொருள் ___________ ஆகும்.

**2. பொருத்துக.**

1. மாரி – ஆக்சிஜன்
2. தண்மை – வெப்பம்
3. உயிர்வளி – குளிர்ச்சி
4. வெம்மை – மழை

3. தேர்ந்தெடுத்து நிரப்புக.

1. வேறுபட்ட பொருள்தரும் சொல் ___________ .

அ) பிராணவாயு ஆ) நைட்ரஜன்

இ) உயிர்வளி ஈ) ஆக்சிஜன்

2. மரம் நடாவிட்டால் ___________.

அ) மாரி பொழியும் ஆ) பிராணவாயு கிடைக்கும்

இ) மண்ணரிப்பு தடுக்கப்படும் ஈ) உலகம் வெப்பமயமாகும்.

4. பொருள் அறிக.

1. பூட்டன் –
2. விதைத்தல் –
3. உறவுகள் –
4. விளைவு –
5. கழை –
6. பண்டம் –
7. உவகை –
8. வரை –
9. எழினி –
10. இன்னல் –

5. சொற்களை அகரவரிசைப்படுத்துக.

மனிதநேயம்,தோரணம்,வான்புகழ்,சோலை,தொடுதிரை,பேரூராட்சி,தொழில்துறை, வெற்றி, சோம்பல், மேதை.

___________________________________________________

___________________________________________________

___________________________________________________

___________________________________________________

# 4 செய்யுளைப் பிழையின்றிச் சரியான ஒலிப்புடன் படித்தலும் நயம் பாராட்டுதலும்

## கற்றல் விளைவு.

பல்வேறு நோக்கங்கள் மற்றும் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும்போது அதற்கேற்ற சொற்கள் (பா நயங்கள் எதுகை, மோனை, இயைபு), தொடர்கள், நிறுத்தக்குறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தல்

## கற்பித்தல் செயல்பாடு:

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் தமிழ்மொழியைப் போற்றும் ஓசைநயமிக்க பாடலைப் படித்துப் பார்க்கலாம்.

### பாடல்

"தமிழுக்கும் அமுதென்று பேர் –அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்– இன்பத்

தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்

தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் – இன்பத்

தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் – இன்பத்

தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் – இன்பத்

தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!"



**மேற்கண்ட பாடலில் ஒரே ஓசையுடைய சொற்கள் குறித்து அறிவோம்.**

- முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத்தொடை.

  எ.கா . தமிழுக்கும்– தமிழ் இன்ப; அமுதென்று – அசதிக்கு.

- இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத்தொடை.

  எ.கா. நிலவென்று – புலவர்க்கு; உயர்வுக்கு – வயிரத்தின்.

- இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத்தொடை.

  எ.கா. நேர்– நீர் ; அமுதென்று – மணமென்று.

**மாணவர் செயல்பாடு :**

தோட்டம் நல்ல தோட்டம் – நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்
கூட்டமாக நாமும் – ஒன்றாய்க்
கூடி ஆடும் தோட்டம்

இந்தப் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை, மோனை, இயைபுச் சொற்களைக் கண்டறிக.

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

**மதிப்பீட்டுச் செயல்பாடு:**

1. பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிர் இளநீரும்

– இப்பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ள எதுகையை எழுதுக.

______________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

2. தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்

தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள எதுகை, மோனை, இயைபு நயங்களை எடுத்து எழுதுக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

## மதிப்பீட்டுச் செயல்பாடு – 3

பின்வரும் காப்பிய வரிகளைச் சரியான ஒலிப்புடன் படித்துக் காட்டுக.

*திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*
*கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்று இவ்*
*அங்கண் உலகு அளித்த லான்*

*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேரு வலம் திரிதலான்*

*மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
*நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்*
*மேல் நின்று தான் சுரத்தலான்*

*–இளங்கோவடிகள்*

# 5 பல்வேறு வகையான மரபுச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல்

**கற்றல் விளைவு:**

மொழியின் இலக்கணக்கூறுகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு :**

அறிமுகம் – விலங்குகள், பறவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக ஒலியெழுப்பும். அவ்வொலிகளைக் குறிப்பிடுவதற்கு ஒவ்வொரு தனிச்சொல் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?

விலங்குகள் மற்றும் பறவைகள் ஒலி எழுப்பக்கூடிய விதத்தை ஒலி மரபுச்சொற்கள் எனக் கூறுவோம்.

**விளக்கம்:**


நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ அப்பொருளை அவ்வாறு வழங்குவது "மரபு" ஆகும். இதேபோன்று உயிரினங்களின் இருப்பிட மரபுச்சொற்கள், வினை மரபுச்சொற்கள், தாவரங்களின் இளமைப் பெயர் மற்றும் தாவரங்களின் உறுப்புப்பெயர்கள் ஆகியவற்றை அறிவோம்.

**எடுத்துக்காட்டு:**

| ஒலிமரபு – விலங்கு | ஒலிமரபு | பறவை இருப்பிட மரபு |
|---|---|---|
| நாய் குரைக்கும் | காகம் கரையும் | எலி வளை |
| சிங்கம் முழங்கும் | மயில் அகவும் | குதிரைக் கொட்டில் |
| புலி உறுமும் | குயில் கூவும் | சிலந்தி வலை |
| நரி ஊளையிடும் | புறா குனுகும் | குருவிக் கூடு |
| யானை பிளிறும் | ஆந்தை அலறும் | மாட்டுத் தொழுவம் |
| குதிரை கனைக்கும் | கோழி கொக்கரிக்கும் | கரையான் புற்று |
| கழுதை கத்தும் | சேவல் கூவும் | ஆட்டுப் பட்டி |

| | | |
|---|---|---|
| எலி கீச்சிடும் | | யானைக் கூடம் |
| | | நண்டு வளை |
| | | பாம்புப் புற்று |

| வினைமரபு | தாவர உறுப்புப் பெயர் மரபு |
|---|---|
| நீர் குடித்தான் | மாவிலை |
| மாத்திரை விழுங்கினாள் | பனையோலை |
| முறுக்குத் தின்றார் | தென்னங் கீற்று |
| பால் பருகினார் | முருங்கைக் கீரை |
| சோறு உண்டாள் | வேப்பந்தழை |
| பூப்பறித்தாள் | சோளத் தட்டை |
| ஆடை நெய்தான் | நெற்றாள் |
| கூடை முடைந்தாள் | வாழைத்தார் |
| பானை வனைந்தான் | முருங்கைப் பிஞ்சு |
| ஓவியம் வரைந்தார் | வெள்ளரிப் பிஞ்சு |
| சுவர் எழுப்பினான் | கத்தரி நாற்று |
| மாலை தொடுத்தாள் | தென்னம் பிள்ளை |
| | வாழைக்குலை |













### மாணவர் செயல்பாடு:

படத்திலுள்ள பறவை மற்றும் விலங்குகளின் ஒலிமரபுச் சொற்களை எழுதுக.

| பறவைகள் | விலங்குகள் |
|---|---|
| | |

### மதிப்பீட்டுச் செயல்பாடு:

1. ஒலி மரபுச்சொல்லை வட்டமிடுக:

அ. பால் பருகினான்

ஆ. மாவிலை

இ. சிலந்தி வலை

ஈ. காகம் கரையும்

2. பொருந்தாததைத் தெரிவு செய்க:

அ. ஆடு கத்தும்

ஆ. பாம்பு சீறும்

இ. மயில் கொக்கரிக்கும்

ஈ. யானை பிளிறும்

3. தவறான ஒன்றைக் கண்டறிந்து வட்டமிடுக:

அ. மா இலை

ஆ. தென்னை இலை

இ. பலா இலை

ஈ.வாழை இலை

4. சரியா? தவறா? என எழுதுக.

அ. கூடை முடைந்தார். __________

ஆ. சோறு தின்றான். ___________

இ. மாத்திரை குடித்தான். _________

ஈ. பால் பருகினான். ___________

5. படங்களுக்குப் பொருத்தமான வினைமரபுச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
|  |  |
| | |

| | |
|---|---|
|  |  |
| | |
|  |  |
| | |

6. மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ. சிலந்தி வலை

----------------------------------------------------------------

ஆ. கத்தரி நாற்று

----------------------------------------------------------------

இ. பால் பருகினார்

----------------------------------------------------------------

ஈ. ஆடை நெய்தான்

----------------------------------------------------------------

# 6 தொழிலையும் பண்பாட்டையும் உணர்த்தும் சொற்களை அறிதல்

### கற்றல் விளைவு:

பல்வேறு தலைப்புகளின்கீழ் படிநிலைப்படுத்தப்பட்ட சொற்களையும் தொழில்கள் மற்றும் பண்பாடு சார்ந்த சொற்களையும் நன்றாகப் புரிந்துகொள்ளுதல், பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல்.

### கற்பித்தல் செயல்பாடு:

மாணவர்களே! நீங்கள் கடலைப் பார்த்துள்ளீர்களா? யார் யார் கடலில் விளையாடி உள்ளீர்கள்? உலகில் மூன்றில் இரண்டு பங்கு நீரால் ஆனது. கடல் பகுதியில் வசிக்கும் மக்கள் பரதவர், பரத்தியர் எனப்படுவர். மீனவர் மீன் பிடிக்கும்போது களைப்புத் தெரியாமல் இருக்கப் பாடல்கள் பாடுவர்.



### சான்று:

"விடிவெள்ளி நம்விளக்கு –ஐலசா

விரிகடலே பள்ளிக்கூடம் –ஐலசா

அடிக்கும் அலை நம்தோழன் –ஐலசா

அருமைமேகம் நமதுகுடை– ஜலசா

பாயும்புயல் நம்ஊஞ்சல்– ஜலசா

பனிமூட்டம் உடல்போர்வை –ஜலசா

காயும்கதிர்ச் சுடர்கூரை –ஜலசா

கட்டுமரம் வாழும்வீடு –ஜலசா

மின்னல்வரி அரிச்சுவடி –ஜலசா

பிடிக்கும்மீன்கள் நம்பொருள்கள்– ஜலசா"

இப்பாடல் வாயிலாகக் கடலைச் சார்ந்து மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொண்டீர்களா?

**மாணவர் செயல்பாடு:**

1. விடிவெள்ளி, விரிகடல் – இவ்விரண்டு சொற்களுக்கு அகராதியைப் பார்த்து பொருள் அறிக.

    ---------------------------------------------------------------

    ---------------------------------------------------------------

2. கடலில் இருந்து கிடைக்கும் அலங்காரப்பொருள்களைப் பட்டியலிடுக.

    (சங்கு, சிப்பி, முதலியன)

    ---------------------------------------------------------------

    ---------------------------------------------------------------

3. கடலில் மிதக்கும் கலன்களுக்கு வழங்கக்கூடிய வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

    (நாவாய், வங்கம், முதலியன)

    ---------------------------------------------------------------

    ---------------------------------------------------------------

4. கடலில் கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை?

    (நண்டு, இறால், மீன் வகைகள்)

    ---------------------------------------------------------------

    ---------------------------------------------------------------

## மதிப்பீட்டுச் செயல்பாடு:

1. கடல்பகுதியோடு தொடர்புடைய சொல்லைத் தேர்ந்தெடுக்க.

   அ. மேய்த்தல்

   ஆ. மீன்பிடித்தல்

   இ. வேட்டையாடுதல்

   ஈ. உழுதல்

2. பாடலின் அடிப்படையில் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1 | பாயும்புயல் | – | வீடு |
| 2 | பனிமூட்டம் | – | ஊஞ்சல் |
| 3 | கட்டுமரம் | – | அரிச்சுவடி |
| 4 | மின்னல்வரி | – | போர்வை |

3. கடலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களை வட்டமிடுக.

   அ. முந்நீர் ஆ. பரவை இ. ஆழி

   ஈ. மிதவை உ. படகு

4. கடல்பகுதி சார்ந்த சொற்கள் நான்கினை எழுதுக

   (எ.கா. படகு பார்த்தல் – மீன் பிடிக்கச் செல்லுதல்.)

   ------------------------------------------------------------

5. உழவுத்தொழில் சார்ந்த பத்துச் சொற்களை எழுதுக.

   (எ.கா. கலப்பை, நீர் இறைத்தல், ....... )

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

6. உங்கள் பகுதியில் நடைபெறும் ஏதேனும் ஒரு தொழில் குறித்து நான்கு தொடர்கள் எழுதுக.

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------


# 7 அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவியின் இலக்கண நுட்பங்கள் அறிதல்

**கற்றல் விளைவு :**

மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்து கொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

**1. பாடல்**




என்ற பாடலில் அமைந்துள்ள அடுக்குத்தொடர்களைப் பார்க்கலாம். இரண்டுசொல் அடுக்கிவரும்; ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியே பொருள் இருக்கும்; அச்சம், வெகுளி, கோபம், விரைவு, அவலம் இவற்றைக் குறிக்கப் பயன்படும்.

(எ.கா.)

கூட்டம் கூட்டமாக, குவியல் குவியலாக, குலை குலையாக, மந்தை மந்தையாக, சாரை சாரையாக – அடுக்குத்தொடர்கள்

(எ.கா.)

புலிபுலி என்று ஒருவன் கத்தினான் – இத்தொடரில் புலி என்பதைத் தனித்து நோக்கினால் அது ஒரு விலங்கின் பெயரை மட்டும் உணர்த்தும். ஆனால் புலிபுலி என்று கத்தும்போது அச்சப்பொருளோடு விரைவுப்பொருளையும் அது உணர்த்துகிறது.

2. மளமளவென்று வேகமாக வேலையை முடி– இத்தொடரில் மளமள என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இதில் மள என்ற சொல் தனித்து நின்று பொருள் உணர்த்தாது; மளமள என்று இணைந்து விரைவுப் பொருளை உணர்த்துகிறது. இவ்வாறு இசை பற்றியும் குறிப்புப் பற்றியும் பண்பு பற்றியும் இரட்டித்து இணைந்து வந்து பொருள் தருவது இரட்டைக்கிளவி எனப்படும். இங்கு மளமள என்பது இரட்டைக்கிளவி ஆகும்.

### மதிப்பீட்டுச் செயல்பாடு:

சலசலக்கும் நீரோடையில் பயந்து பயந்து மான் ஒன்று மலங்க மலங்கச் சுற்றிப் பார்த்து மசமசவென நிற்காமல் மடமடவென நீர் பருகியது. அங்கே பதுங்கிப் பதுங்கி வந்த புலி ஒன்று திகுதிகு எனத் தீப்பொறி தெறிக்கும் கண்களால் குறுகுறுவென மானைப் பார்த்தது. தொலைவில் இருந்து இதனைக் கண்ட இருவர் வெலவெலத்துப் போய்க் கால்கள் வெடவெடவென நடுநடுங்கப் 'புலி புலி' என கத்தவும் துணிவின்றிச் செய்வதறியாது திருதிருவென விழித்தனர். அப்போது முதலைக்குட்டி மெதுவாய் நீந்திவர, புலியின் கவனம் சற்றே சிதறியது. அச்சமயம் மரக்கிளை சடசடவென முறிந்தது.



1. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி சொற்களை எடுத்து எழுதவும்.

| அடுக்குத் தொடர்: | இரட்டைக் கிளவி: |
|---|---|
| | |

2. கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(சலசல, கலகல, மளமள)

* மிட்டாயைப் பார்த்ததும் குழந்தை ________________________ எனச் சிரித்தது.
* ஆற்றில் நீர் ____________________________________________ என ஓடியது.
* நேரமாகி விட்டதால் சங்கவி வீட்டுப்பாடங்களை ________________________ என்று எழுதினாள்.

3. தொடர் அமைத்து எழுதுக.

அ. கொழுகொழு ஆ. நன்று நன்று

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

4. 'வெடவெடத்து – பாம்பு பாம்பு' – ஆகிய இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர் இரண்டையும் சேர்த்துப் பொருளுள்ள ஒரு தொடராக எழுதுக.

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

# 8 மரபுத்தொடரைப் பொருள் அறிந்து பயன்படுத்துதல்

**கற்றல் விளைவு:**

மொழியின் நுட்பமான கூறுகளை மனத்தில் கொண்டு தங்களுக்கான சொந்த மொழியைக் கட்டமைத்தல்.


**கற்பித்தல் செயல்பாடு:**

1. வகுப்பில் இன்று மரபுத்தொடர் குறித்து அறிந்து கொள்வோமா?

   * நமது வகுப்பில் ஈர மனசுக்காரன் யார்? அவனை அவ்வாறு அழைக்கக் காரணம் என்ன?
   * உன் நண்பர்களில் தர்மபிரபு யார்? அவனை தர்மபிரபு என்று ஏன் அழைக்கிறோம்?.

இவற்றைப்போன்ற பலவாறான வினாக்களைக் கேட்டு மாணவர்களை விடைகூறச் செய்தல்.

2. எங்கள் ஊரில் மணி என்பவர் பிண்ணாக்கு வணிகத்தில் கொடிகட்டிப் பறந்தார். அவரும் அவர்தம் குடும்பமும் பிண்ணாக்குத் தொழிலை வாழையடி வாழையாகச் செய்துவந்தனர். அவர் மற்ற வியாபாரிகளையும் அவர்களது வியாபாரத்தையும் பலவாறாகக் கயிறு திரித்துக்கூறி அவர்கள் வியாபாரத்தைத் தடுத்தார். அவரது பித்தலாட்டத்தை ஊர்மக்கள் அறிந்தனர். ஊர்மக்கள் இவருக்குத் தண்டனை அளிக்கலாம் என முடிவெடுத்தனர். இதனால் மணியின் பேராசை கானல் நீரானது. அவ்வியாபாரிகள் தம்மை ஏற்றுக் கொள்வதற்காக முதலைக்கண்ணீர் வடித்தார்.



இப்பத்தியில் வரும் மரபுத்தொடர்களின் பொருளை அறியலாம்.

மரபுத்தொடர் என்பது நேரடியாகப் பொருள் உணர்த்தாமல் குறிப்பால் பொருள் உணர்த்துவதாகும். மரபுத்தொடரில் ஒரு சொல் அல்லது சொற்றொடர் அதன் நேர்

பொருளை உணர்த்தாது. வழிவழியாகத் தொடரும் பயன்பாட்டால் வேறு ஒரு குறிப்புப் பொருளை உணர்த்தும்.

| மரபுத்தொடர் | உணர்த்தும் பொருள் |
|---|---|
| பஞ்சாகப் பறத்தல் | அலைந்து திரிதல் |
| ஆகாயத்தாமரை | இல்லாத ஒன்று |
| நீர்மேல் எழுத்து | மறைந்து போதல் |
| முதலைக் கண்ணீர் | பொய் அழுகை |
| மலையேறிவிட்டது | மாற்றம் அடைதல் |
| பசுமரத்தாணி | ஆழமாகப் பதிதல் |
| கம்பி நீட்டினான் | ஓடி விடுதல் |
| பச்சைக்கொடி | இசைவு தெரிவித்தல் |

**மதிப்பீட்டுச் செயல்பாடு:**

1. மரபுத்தொடர் உணர்த்தும் பொருளை வட்டமிடுக.

கானல் நீர் – ஏமாற்று வேலை, கிடைக்காத ஒன்று

கரையேறுதல் – துன்பத்திலிருந்து மீளுதல், ஆற்றிலிருந்து ஏறுதல்

கைகழுவுதல் – வேலை போய்விட்டது, விட்டுவிடுதல்

குரங்குப்பிடி – உறுதியாகப் பற்றுதல், கைப்பிடி

2. தேர்ந்தெடுத்து நிரப்புக.

1.தொழிலில் பேராசையின் காரணமாக _________ கால் வைத்தான்.

(அகல / நீண்ட)

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

2. தலைவரை மக்கள் _________கொண்டாடினார்கள்.

(தலையில் வைத்து / கையில் வைத்து)

_____________________________________________________

_____________________________________________________

3. மாணவர்கள் நன்றாகப் படித்தால்தான் வாழ்க்கைக்கடலில்.

(கரையேறுவார்கள் / ஓடுவார்கள்)

_____________________________________________________

_____________________________________________________

3. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. பஞ்சாகப் பறத்தல் | – | விடாப்பிடி |
| ஆ. கரையேறுதல் | – | இல்லாத ஒன்று |
| இ. ஆகாயத்தாமரை | – | அலைந்து திரிதல் |
| ஈ. குரங்குப்பிடி | – | துன்பத்திலிருந்து மீளுதல் |

4. கொடுக்கப்பட்டுள்ள மரபுத்தொடர்களைக் கொண்டு சொற்றொடர் அமைக்க.

அ. பசுமரத்தாணி

_____________________________________________________

_____________________________________________________

ஆ. மலையேறிவிட்டது

_____________________________________________________

_____________________________________________________

இ. கல்மேல் எழுத்து

_____________________________________________________

_____________________________________________________

ஈ. பச்சைக்கொடி

_____________________________________________________

_____________________________________________________

உ. ஈரமனசு

_____________________________________________________

_____________________________________________________

# 9 தமிழ்ப் படைப்பாளர்கள், அவர்தம் படைப்புகள் குறித்துப் பேசுதல்

**கற்றல் விளைவு:**

கேட்ட அல்லது படித்த பல்வேறு வகை இலக்கியங்கள் பற்றிப் பேசவும் அவற்றின் மீதான விவாதம் நடத்தவும் பகுப்பாய்வு செய்யவும் வாய்ப்பளித்தல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

புதுவையில் தோன்றி தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள் பலர். அவர்களுள் பாரதிதாசன், வாணிதாசன், தமிழ்ஒளி, திருமுருகன், பிரபஞ்சன் ஆகியோர் ஆற்றிய பணிகள் குறித்து அட்டவணையில் பார்ப்போம்.

| பாரதிதாசன் | வாணிதாசன் | தமிழ் ஒளி | இரா.திருமுருகன் | பிரபஞ்சன் |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| இயற்பெயர் (கனக சுப்புரத்தினம்) | எத்திராசலு என்கின்ற அரங்கசாமி | இயற்பெயர் விஜயரங்கம் | தனித்தமிழ்ப் பற்றால் சுப்பிரமணியன் என்ற பெயரை 'திருமுருகன்' என மாற்றிக் கொண்டார் | தம் எழுத்தால் தாய் நாட்டைப் போற்றச் செய்தவர், உலகம் போற்றும் உயர்ந்த எழுத்தாளர் |
| தந்தை பெரியாரால் 'புரட்சிக் கவி பட்டம்' வழங்கப் பட்டது | தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழிகளை அறிந்தவர் . (பாரதி தாசனின் மாணவர்) | இவரும் பாரதிதாசனின் மாணவர் , 'சிற்பியின் கனவு' என்னும் மேடை நாடகம் 'வணங்கா முடி' என்ற பெயரில் திரைப் படமாக வெளி வந்தது | 'தெளி தமிழ்' இன்னும் இவரது இதழ் இன்றும் வெளி வந்து கொண்டிருக் கிறது. | எண்ணற்ற சிறுகதைகள், நாவல்கள், வரலாற்று நூல்கள் எழுதியுள்ளார். |

| | | | | |
|---|---|---|---|---|
| இருண்ட வீடு, குடும்பவிளக்கு, தமிழியக்கம் போன்ற 72 நூல்களுக்கு மேல் பாடியுள்ளார் | இவர் எழுதிய பல்வேறு நூல்களுள் 'கொடி முல்லை' மிகவும் சிறப்பு பெற்றது | வீராயி, கவிஞனின் காதல், நிலை பெற்ற சிலை போன்ற குறுங்கா வியங்களைப் படை த்தார் | பாவலர் பண்ணை, என் தமிழியக்கம், நூறு சொல்வ தெழுதுதல், ஆய்வு நூல்கள், வரலாற்று நூல்கள் | இவரது 'வானம் வசப்படும்' என்ற நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது |

## மாணவர் செயல்பாடு:

1. மாணவர் ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தெரிந்த தமிழ்க்கவிஞர் ஒருவரின் பெயரைக் கூறி அவர்தம் சிறப்பை எடுத்துரைத்தல்.

2. மாணவர் ஒருவர் நூல் பெயரைக்கூற மற்றொருவர் எழுதியவரின் பெயரைக் கூறுதல்.

3. உங்கள் பள்ளி நூலகத்தில் உள்ள எவையேனும் மூன்று நூல்கள் குறித்து கீழ்க்காணும் விவரங்களைத் திரட்டுக.

   அ. நூலின் பெயர்

   ஆ. நூல் ஆசிரியர் பெயர்

   இ. நூல் வகை (கதை/கட்டுரை/கவிதை/ பாடல்.... இன்னபிற).

## மதிப்பீட்டுச் செயல்பாடு:

1. கவிஞர் தமிழ்ஒளி குறித்துப் பேசுக.

   ------------------------------------------------------------

2. கவிஞர் பாரதிதாசன் பாடல்களுள் உனக்குப் பிடித்த ஒரு பாடலைப் பாடநூலில் இருந்து எடுத்தெழுதுக.

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

3. பின்வரும் கவிஞர் வாணிதாசனின் பாடலைப் படித்து அது குறித்த உங்கள் கருத்தை ஒரு பத்தியில் எழுதுக.

"மழையே! மழையே! வா வா
வாழ்வின் உயிரே வா வா
உழவர் உன்னை எதிர்பார்த்தே
ஒவ்வொரு நாளும் பேசுகின்றார்
ஏரி குளங்கள் நிறைந்திடவும்
எருமை மாடு களித்திடவும்
ஊரில் உள்ள வயலெல்லாம்
பச்சைப் பட்டை உடுத்திடவும்
மரங்கள் செடிகள் தழைத்திடவும்
மலர்கள் பூத்துச் சிரித்திடவும்
தெருவில் சிறுவர் தாளாலே
கப்பல் செய்து விட்டிடவும்
காடு கரம்பு துளிர்த்திடவும்
காளை மாடு கொழுத்திடவும்
ஓடை ஆறு கல்லிடுக்கில்
ஓயாது இசையை மீட்டிடவும்
தவளை எல்லாம் ஓயாது
தத்திக் கத்திக் களித்திடவும்
குவளை பூக்க வண்டினங்கள்
தேனைக் குடித்துப் பாடிடவும். . . "





4. எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களின் அப்பாவின் வேஷ்டி என்ற கதையை உங்கள் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்க. அது குறித்த உங்கள் கருத்தை ஆசிரியரிடமும் வகுப்பு மாணவர்களிடமும் பகிர்ந்து கொள்க.

**நீங்கள் பகிரவிரும்பும் கருத்து:**

# 10 கதையினைக் கேட்டு விளக்கம் அளித்தல்

**கற்றல் விளைவு:**

தாங்கள் படித்த/ கேட்ட (சமூகம் / நகைச்சுவை / வீரசாகசம்) கருத்துகள் பற்றி விவாதிக்கவும், வினாக்கள் எழுப்பவும், விளக்கம் அளிக்கவும் இயலுதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

பேசப்பேசத்தான் பேச்சு திருத்தமாக அமையும். செந்தமிழும் நாப்பழக்கம் என்பதை அறிவீர்கள்தானே!

மன்னர் அக்பர், பீர்பால் காலத்தில் நடந்த நிகழ்வு ஒன்றைச் சொல்கிறேன். கவனமாகக் கேளுங்கள்.

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற அக்பர் ஒரு குடிமகனின் முகத்தில் காலை எழுந்ததும் விழித்ததால் தனக்கு விபத்து ஏற்பட்டதாக எண்ணி அவருக்குத் தண்டனை அளிக்கிறார். இதனைக் கண்ட பீர்பால் மன்னருக்குப் புத்தி புகட்டும் விதமாக "மன்னா! தாங்கள், அவர் முகத்தில் விழித்ததால் தங்களுக்குச் சிறுகாயம் மட்டுமே ஏற்பட்டது. ஆனால், அவருக்கோ உயிர்ச்சேதம் ஏற்படும் நிலை உள்ளதே. நீங்களே! புரிந்துகொள்ளுங்கள் இராசியில்லாதவன் யார் என்று? எனக்கூறினார். மன்னர் வெட்கித் தலைகுனிந்து அந்த அப்பாவியை விடுதலை செய்யுமாறு கட்டளையிட்டார்.



மாணவர்களே! பீர்பாலின் மதிநுட்பத்தால் ஓர் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதை இக்கதை வாயிலாக அறியமுடிகிறது. இது போன்று கதை குறித்த உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.

## மதிப்பீட்டுச் செயல்பாடு :

**1. வகுப்பில் நடந்த பின்வரும் நிகழ்வினை வரிசைப்படுத்தி எழுதுக. இந்நிகழ்வினைக் கதையாகக் கூறுக.**

**எ.கா.**

1. வளவனும் பாலனும் பேசிக் கொண்டிருந்தனர்.
2. வளவன் எல்லாருக்கும் முன்பாக முதலில் பள்ளிக்கு வந்துவிட்டான்.
3. வளவன், காலையில் உணவு உண்ணாமல் பள்ளிக்கு வந்தான்.
4. திடீரென்று வளவன் மயங்கி விழுந்தான்.
5. என்ன சத்தம்? எனக் கேட்டார்.
6. விழுந்த சத்தம்கேட்டு ஆசிரியர் உள்ளே வந்தார்.

2. **கதையைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**எறும்பும் புறாவும்**




எறும்பு ஒன்று ஆற்றுநீரில் அடித்துச் செல்லும்போது மரத்திலுள்ள புறா ஒன்று அதைப் பார்த்தது. உடனே மரத்தில் உள்ள இலையைப் பறித்து தண்ணீரில் போட்டது. அதைப் பார்த்த எறும்பு அந்த இலையின் மேல் ஏறி தப்பித்துக் கொண்டது. ஒருநாள் வேடன் ஒருவன் மரத்திலுள்ள புறாவைக் கொல்வதற்காக வில்லில் இருந்து அம்பை எய்தினான். அப்பொழுது அதைப்பார்த்த எறும்பு,அவனது காலைக் கடித்து விடுகிறது. அம்பு திசைமாறிச்

சென்று விடுகிறது. புறா அதை அறிந்து தப்பித்து விடுகிறது. உரிய காலத்தில் ஒருவர் செய்யும் உதவியானது, அவருக்கு பல்வேறு நன்மைகளைப் பெற்றுத்தரும் என்ற நீதியை இக்கதை உணர்த்துகிறது.

**வினாக்கள்:**

1. இப்பத்தியில் இடம்பெறும் உயிரினங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

2. புறா மரத்தில் உள்ள இலையைப் பறித்துத் தண்ணீரில் போட்டதற்கான காரணம் என்ன?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

3. இக்கதையின்வழி உணரப்படும் பண்பு யாது? இப்பண்பு வெளிப்பட்ட நிகழ்வு ஒன்றனைக் குறித்துப் பேசுக.

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

4. இக்கதையிலிருந்து இரண்டு வினாக்களை உருவாக்குக.

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

# 11 பண்பியல் திறன்களை மேம்படுத்துதல்

## கற்றல் விளைவு:

தங்களைச் சுற்றி நடக்கும் பல்வேறு நிகழ்வுகளுக்கு உடனடியாக எதிர்வினை புரிதலையும் வினாக்கள் எழுப்புதலையும் ஊக்கப்படுத்துதல்.

## கற்பித்தல் செயல்பாடு

மாணவர்களே, நீங்கள் **இனிமையாகப் பேசுவீர்கள்தானே!**

உணவு உண்ணும்போது பசித்தவரைக் கண்டால் **பகிர்ந்து கொடுப்பீர்கள்தானே!**

ஆமாம். இனிமையாகப் பேசுதல், பகிர்ந்து உண்ணுதல் என்பவை உங்களின் நற்பண்புகள்.

மேலும் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். இவற்றிலிருந்து வெளிப்படும் பண்புக் கூறுகளையும் அறிவோம்.

* வகுப்பில் ஒரு மாணவர், எழுதுபொருள் கொண்டுவராத சூழலில் உங்களிடம் கூடுதலாக உள்ள எழுதுபொருளைக் கொடுத்து உதவி செய்துள்ளீர்கள்தானே?

இச்செயல் **பிறருக்கு உதவும் பண்பைக்** காட்டுகின்றது.

* தண்ணீரில் தத்தளித்த எறும்புக்குப் புறா உதவியது. புறா தனக்குச் செய்த உதவியை எறும்பு மறக்கவில்லை. அதனால்தான், வேடனிடமிருந்து புறாவைக் காப்பாற்றியது. இந்தக் கதை உங்களுக்கு நன்றாகத் தெரியும்தானே?

இக்கதை **நன்றி மறவாமையை** எடுத்துக்காட்டுகிறது.

* மயில் மழையில் நனைந்து குளிரில் நடுங்கியது. அதனைக் கண்ட பேகன் பார்த்துவிட்டுச் செல்லாமல் தன்னுடைய போர்வையை எடுத்துப் போர்த்தி அம்மயிலின் துன்பம் நீக்கினான்.

இச்செயலிலிருந்து பிற **உயிர்களிடம் அன்பு காட்டுதல்** வெளிப்படுகிறதுதானே! நாமும் பிறர் துன்பத்தில் இருப்பதை அறிந்தால், இயன்ற உதவியைச் செய்ய வேண்டும்.



* நான்கு மாடுகள் ஒற்றுமையாக இருந்தன. அதனால் சிங்கம் நினைத்தது நடக்கவில்லை. இந்த நான்கு மாடுகளும் சிங்கமும் கதை உங்களுக்கு நன்றாகத் தெரியும்தானே?

இக்கதை, **ஒற்றுமையுடன் வாழவேண்டும்** என்பதைக் காட்டுகின்றது.

இப்படியாக ஒவ்வொரு சூழலையும் புரிந்துகொண்டு நம்மால் இயன்றவரை நல்ல பண்புகளை வெளிப்படுத்த வேண்டும்.

## மதிப்பீட்டுச் செயல்பாடு: 1

**பின்வரும் நிகழ்வைப் படித்து செயலையும் நற்பண்பையும் எழுதுக.**

இரவியும் கண்ணனும் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் நெருங்கிய நண்பர்கள். ஒருநாள், இரவியின் பெற்றோர் வெளியூர் சென்றிருந்தனர். அந்நாளில் இரவியின் வீட்டிற்குக் கண்ணன் வந்திருந்தான். அப்பொழுது இரவியின் நாய் நீர்த்தொட்டியில் விழுந்ததால் கால் முறிந்துவிட்டது. நண்பர்கள் இருவரும் நீர்த்தொட்டியில் இருந்து கவனமாக நாயை வெளியில் எடுத்தனர்; கால்நடை மருத்துவமனைக்குத் தூக்கிச்சென்றனர். மருத்துவர் அதற்குச் சிகிச்சை அளித்தார். பின்னர் இரவியும் கண்ணனும் மருத்துவருக்கு நன்றிகூறி வீடு திரும்பினர். மறுநாள் இரவியின் பெற்றோரும் வீட்டிற்குத் திரும்பினர். இரவி, கண்ணன் இருவரின் செயலைக்கேட்டு மகிழ்ந்து பாராட்டினர்.



| செயல் | நற்பண்பு |
|---|---|
| எ.கா.<br>நீர்த்தொட்டியில் இருந்து நாயை வெளியில் எடுத்தல் | பிற உயிர்களிடம் அன்பு காட்டுதல் |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**மதிப்பீட்டுச் செயல்பாடு : 2**

பின்வரும் கதையைப் படித்துப் பார்த்துப் பட்டாம் பூச்சி என்ன பதில் கூறியிருக்கும் என்பதை எழுதுக.

பட்டம் ஒன்று வானத்தில் மிக உயரமாகப் பறந்துக் கொண்டிருந்தது. தான் உயரமாகப் பறப்பதை எண்ணி அதிக ஆணவம் கொண்டிருந்தது. கீழே பூக்களின்மீது பறந்து கொண்டிருந்த வண்ணத்துப் பூச்சியைப் பார்த்து "என்னைப் பார்த்தாயா! நான் வானத்தைத் தொடுமளவு மேலே பறக்கிறேன். "நீயோ மிகவும் தாழ்வாகப் பறந்து கொண்டிருக்கிறாய்" என்று பெருமைபேசியது, பட்டாம்பூச்சிபதிலுக்கு



…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

# 12 நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தும் திறன் பெறுதல்

**கற்றல் விளைவு :**

பல்வேறு நோக்கங்கள் மற்றும் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும்போது அதற்கேற்பச் சொற்கள், தொடர்கள், நிறுத்தக்குறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

நாம் பேசுவது கேட்போருக்குப் புரியவேண்டும் எனில் தெளிவாகப் பேசவேண்டும். பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளை உரைநடையில் எழுதிக்காட்டுவதற்கு நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்த வேண்டும்.

பொருள் புரிந்து சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் தக்க உணர்ச்சியுடன் படிப்பதற்கு நிறுத்தக்குறி பயன்படுகிறது.

செய்திப் பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படாமல் இருக்கவும் நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துகிறோம்.

மிகுதியாக நாம் பயன்படுத்துகின்ற சில நிறுத்தக்குறிகளை அறிந்து கொள்வோம்.

- ( . ) – முற்றுப்புள்ளி
- ( , ) – காற்புள்ளி
- ( ? ) – வினாக்குறி
- ( ! ) – வியப்புக்குறி

**முற்றுப்புள்ளி**

சொற்றொடர்கள், பொருளால் முற்றுப்பெற்றது என்பதைக் குறிக்க முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.

**(எ.கா.)**

அன்பும் பண்பும் அமைந்ததே இல்வாழ்க்கை.

## காற்புள்ளி

ஒரு தொடரில் பெயர்களை, பொருள்களை அடுக்கிக் கூறும்போது காற்புள்ளி இடவேண்டும்.

**(எ.கா.)**

தாய், தந்தை, தமையன், தங்கை என்னும் நால்வர் வீட்டில் உள்ளனர்.

## வினாக்குறி

வினாப்பொருளைத் தரும் சொற்றொடர்களுக்குப் பின் வினாக்குறி இடுதல் வேண்டும்.

**(எ.கா.)**

பாடலை எழுதியவர் யார்?

## உணர்ச்சிக்குறி / வியப்புக்குறி

மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல் போன்ற உணர்ச்சி உரைகளுக்குப் பின் உணர்ச்சிக்குறி இடுதல் வேண்டும்.

**(எ.கா.)**

* போட்டியில் முதல் பரிசு வென்றவர் என் நண்பரே!
* இப்போதுதான் உன்னிடம் தொலைபேசியில் பேசினேன். ஆ! உடனே இங்கே வந்துவிட்டாயே!


## மதிப்பீட்டுச் செயல்பாடு:

**1. பொருத்துக.**

| சொற்றொடர் | நிறுத்தக்குறி |
|---|---|
| அடடா நீங்கள் வந்ததைப் பார்க்கவில்லையே | வினாக்குறி (?) |
| அம்புலி மதி சந்திரன் பிறை ஆகியன நிலவின் வேறுபெயர்கள் | முற்றுப்புள்ளி (.) |
| எனக்குக் கதை கேட்க மிகவும் பிடிக்கும் | உணர்ச்சிக்குறி/ வியப்புக்குறி (!) |
| பனிமலை உருகிப்போகிறதே ஏன் | காற்புள்ளி (,) |

2. பின்வரும் பத்தியில் நிறுத்தக்குறி பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை எடுத்து எழுதுக.

நண்பா! நண்பா! எங்கே இருக்கிறாய்? என் ஆருயிர் நண்பா! இங்கேயா இருக்கிறாய்? ஐயோ! வலையில் மாட்டிக் கொண்டாயே! கத்துவதற்குக்கூட வழியில்லாமல் இப்படிக் கம்பிவலையில் சிக்கிக்கொண்டாயே. சரிசரி! நீ தப்பித்துக்கொள்ள ஒரு யோசனை சொல்கிறேன், கேள். விவசாயி அருகில் வரும்போது நீ இறந்துவிட்டது போல் நடி; அசையாமல் இரு. விவசாயி உன்னை வலையிலிருந்து விடுவித்தவுடன் நான் மரத்திலிருந்து கா! கா! கா! என்று குரல் கொடுக்கிறேன், உடனே தப்பித்துக்கொள்.



| சொற்கள் | நிறுத்தக்குறி |
|---|---|
| நண்பா! நண்பா! | வியப்புக்குறி |
| | |
| | |
| | |

3. **கீழ்க்காணும் தொடர்களுக்கு நிறுத்தக்குறியிட்டு எழுதுக.**

1. ஆடுகள் மாடுகள் நாய்கள் கோழிகள் ஆகியவற்றை வளர்த்து வருகிறேன்.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

2. இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியா நண்பரே வருக

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. நான் நேற்று என் பிறந்தநாளைக் கொண்டாடினேன்

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. திருக்குறளில் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகள் உண்டு

------------------------------------------------------------

------------------------------------------------------------

5. தந்தை மகன் இருவர் முகத்திலும் மலர்ச்சி

------------------------------------------------------------

------------------------------------------------------------

6. இன்னும் இரு நாள்களில் பருவமழை பெய்யும்

------------------------------------------------------------

------------------------------------------------------------

7. எவ்வளவு பெரிய மலை

------------------------------------------------------------

------------------------------------------------------------

# 13 பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல், வினா உருவாக்குதல்


**கற்றல் விளைவு:**

தாங்கள் படித்த/ கேட்ட (சமூகம் / நகைச்சுவை / வீரசாகசம்) கருத்துகள் பற்றி விவாதிக்கவும் வினாக்கள் எழுப்பவும் விளக்கம் அளிக்கவும் இயலுதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

விளையாட்டு என்றாலே எல்லாருக்கும் பிடிக்கும். இப்போது நாம் ஒரு விளையாட்டைப் பற்றித்தான் படிக்கப் போகிறோம். குறிப்பிட்ட ஒரு பகுதியை எவ்வாறு படித்துப் புரிந்துகொள்ள வேண்டும். அதுசார்ந்த வினாக்களுக்கு எவ்வகையில் விடையளிக்க வேண்டும் என்பன குறித்துத் தெரிந்து கொள்வோமா?

தமிழர்களின் வீரவிளையாட்டுகளுள் ஒன்று சிலம்பம். சிலம்புதல் என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் என்ற பெயர் தோன்றியது. கம்பு சுழற்றுதல் என்னும் பெயரும் இதற்கு உண்டு. சிலம்பக் கலையில் மான்கொம்பு, பிச்சுவா, கத்தி, சுருள்பட்டா, வளரி போன்ற ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. தற்காப்புக்காகத் தோன்றிய இக்கலை, வீர விளையாட்டாக இன்று அறியப்படுகிறது.



மேற்கண்ட பத்தியை ஆழ்ந்து படிக்க வேண்டும். அதன் உட்கருத்தை அறிய முயற்சி செய்யவேண்டும். இப்பத்தியிலிருந்து அறிந்துகொண்ட கருத்துகள்

* இப்பத்தியில் குறிப்பிடப்படும் விளையாட்டு (**சிலம்பம்**)
* சிலம்பம் என்பதற்கான பொருள் (**ஒலித்தல்**)
* சிலம்பம் என்னும் பெயர் தோன்றியன் காரணம் (**கம்பு சுற்றும் ஓசை**)
* சிலம்பத்தில் பயன்படுத்தப்படும் வேறு ஆயுதங்கள் (**மான்கொம்பு, பிச்சுவா, கத்தி, சுருள்பட்டா, வளரி**)
* பத்தியில் இடம்பெற்றுள்ள நிறுத்தக்குறிகள் (**காற்புள்ளி, முற்றுப்புள்ளி**).

**மேற்கண்டவாறு படித்த பகுதியிலிருந்து கருத்துகளைத் தெரிந்து கொண்டோம். இப்போது பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்போம்.**

1. சிலம்பு என்பதன் பொருள் என்ன?

   சிலம்பு என்பதன் பொருள் ஒலித்தல்.

   ________________________________________

2. சிலம்பம் விளையாட்டு உருவான காரணம் யாது?

   தற்காப்பு காரணமாகவே சிலம்பம் உருவானது.

   ________________________________________

3. நீங்கள் அறிந்த வீரவிளையாட்டுகள் இரண்டனைக் குறிப்பிடுக.

   ஜல்லிக்கட்டு, வில்வித்தை

   ________________________________________

4. சிலம்பக் கலையில் மான்கொம்பு பிச்சுவா கத்தி சுருள்பட்டா வளரி போன்ற ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன – பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

   சிலம்பக் கலையில் மான்கொம்பு, பிச்சுவா, கத்தி, சுருள்பட்டா, வளரி போன்ற ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

   ________________________________________

5. பத்தியிலிருந்து இரண்டு வினா உருவாக்குக.

   * கம்பு சுழற்றுதல் என்ற பெயர்கொண்ட கலை எது?
   * பத்தியில், தன்னைப் பாதுகாத்தல் என்ற பொருள்தரும் சொல் எது?

## மதிப்பீட்டுச் செயல்பாடு:

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

உலகில் எந்த ஆறும் தனது தாகத்திற்காக ஓடுவதில்லை. எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை. எந்த மரமும் தனக்காகக் கனிகளை உருவாக்குவதில்லை. இவற்றைப் போல மனிதனும் தனக்கென வாழாமல், பிறர்க்கென வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு அருள், பொறுமை, பரிவு, நன்றி உணர்வு, இன்சொல் பேசுதல் போன்றவை தேவை. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே மனிதநேயம் ஆகும். மனிதநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

1. படத்திற்குப் பொருத்தமான தொடரைப் பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

| | |
|---|---|
|  | |
|  | |

2. எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை – என்னும் தொடர் உணர்த்தும் கருத்து யாது?

3. யாரால் உலகம் இயங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

4. பத்தியிலுள்ள இரண்டு எதிர்ச்சொற்களை எடுத்தெழுதுக.

5. பத்தியின் மையக்கருத்தை எழுதுக.

6. பத்தியிலிருந்து இரண்டு வினா உருவாக்குக.

# 14 சூழலைக் கேட்டுப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளித்தல்

**கற்றல் விளைவு:**

தங்களின் சுற்றுச்சூழலில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளுக்கு உடனடியாக எதிர்வினை புரிதலையும் வினாக்கள் எழுப்புதலையும் ஊக்கப்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

கனிமொழி எட்டுவயது சிறுமி. எல்லாரும் தயங்கிய ஒரு சூழலில் கனிமொழியின் செயல் எப்படி இருந்தது? (நிகழ்வினைக் கவனமாகக் கேட்க வேண்டும். அப்போதுதான் அதுசார்ந்த வினாக்களுக்கு எளிதாக விடையளிக்க முடியும்.)

அடுக்குமாடி குடியிருப்பைச் சுற்றிலும் ஓங்கி உயர்ந்த மரங்கள். பறவைகளின் பலவித ஓசைகள். அந்தக் குடியிருப்பில் பல குடும்பத்தினர் இருந்தனர். ஒருவருக்கு ஒருவர் அன்பாகப் பழகுவர். சின்னஞ்சிறிய குடும்ப விழாவாக இருந்தாலும் குறைந்தது ஐம்பது பேராவது கலந்துகொண்டு மகிழ்ச்சி அடைவர். மாலை வேளைகளில், குழந்தைகள் அனைவரும் ஓடி ஆடி விளையாடி மகிழ்வர். இயற்கைக்குப் பொறாமை போலும்! திடீரென கொரோனா என்ற பெருந்தொற்றுப் பரவியதன் காரணமாக யாரும் ஒன்றாகக் கூடுவதும் பழகுவதும் இல்லை.



அக்குடியிருப்பில்தான் தமிழ்ச்செல்வன் குடும்பத்தினரும் இருந்தனர். அவர் சமூகசேவை செய்துவந்தார். அவருடைய தாய், தந்தை இருவருக்கும் கொரோனாத் தொற்றுப் பரவியது. அவர் தம் பெற்றோரை மருத்துவமனையில் சேர்த்தார். பிறகு அவருடைய குடும்பத்தினர் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டனர்.



குடியிருப்பில் உள்ள அனைவரும் இதனை அறிந்தும் எந்த உதவியும் செய்ய முன்வரவில்லை. பக்கத்து வீட்டிலுள்ள எட்டு வயதே ஆன சிறுமிதான் கனிமொழி. அச்சிறுமி தன் தாயின் உதவியுடனும் தகுந்த பாதுகாப்புடனும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தாள். இயல்பு நிலைக்குத் திரும்பிய தமிழ்ச்செல்வன் குடும்பத்தினர் சிறுமியின் செயல்கண்டு வியந்து மகிழ்ந்து பாராட்டினர்; நன்றி கூறினர்; அவளைக் கடவுளாகவே பார்த்தனர். இதைக்கண்டு குடியிருப்பில் இருந்த மற்றவர்களும் தங்களின் உதவி செய்யாத செயலுக்காக வருத்தம் தெரிவித்தனர். இக்கட்டான சூழலிலும் பாதுகாப்பாக உதவிய அச்சிறுமியை அனைவரும் பாராட்டினர்.

இந்நிகழ்விலிருந்து நாம் தெரிந்துகொண்ட சுருக்கமான கருத்தை அறிவோமா?

அடுக்குமாடிக் குடியிருப்பில் இயல்பான சூழல் எப்படி இருந்தது?

(அனைவரும் ஒன்றுகூடி, மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்)

இயல்பான சூழல் மாறிப்போனதன் காரணம் என்ன? (கொரோனா என்னும் பெருந்தொற்றுப் பரவியது)

தமிழ்ச்செல்வன் அவர்களின் பணி எத்தகையது? (அனைவருக்கும் உதவும் சமூகசேவை செய்வது)

தமிழ்ச்செல்வனின் குடும்பத்தினருக்கு உதவியவர் (அருகிலிருந்த எட்டுவயது சிறுமி கனிமொழி)

கனிமொழியின் செயல் சரியானதா? (தொற்றுக்காலம் எனினும் உரிய பாதுகாப்புடன் உதவியதே சரியான செயல்)

## மதிப்பீட்டுச் செயல்பாடு :

**1. வினாக்களைப் படித்து விடை எழுதுக.**

1. அடுக்குமாடிக் குடியிருப்பில் வாழ்ந்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் – அது இயல்பானதா? காரணம் தருக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

2. பெருந்தொற்றுக் காலத்தில் கனிமொழி செய்த செயல் எப்படிப்பட்டது? உங்களின் கருத்தைக் குறிப்பிடுக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. கனிமொழியின் இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. நிகழ்வில் வெளிப்படுகின்ற நற்பண்புகள் யாவை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

**2. நிகழ்வைப் படித்து உங்களின் கருத்தைக் குறிப்பிடுக.**

விபத்தில் பாதிக்கப்பட்டு இதயம் மட்டுமே இயங்கிய நிலையில் ஹிதேந்திரனின் இதயத்தை இதயம் தேவைப்படும் சிறுமிக்குக் கொடையாக வழங்கினர் ஹிதேந்திரனின் பெற்றோர்.

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

............................................................................................................................

# 15 மயங்கொலிச் சொற்களைப் பொருள் வேறுபாடு அறிந்து பயன்படுத்துதல்


**கற்றல் விளைவு:**

மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு அவற்றைத்தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

* மனம் – மணம்
* ஒளி – ஒலி – ஒழி
* கரை – கறை ஆகிய சொற்களை ஒலித்துப் பாருங்கள். ஒரே ஓசை கேட்கிறதல்லவா? இச்சொற்களின் ஓசை ஒத்து இருக்கிறது. ஆனால், சொற்களின் எழுத்துகள் மாறுபட்டுள்ளன. இதனால், சொற்களின் பொருளும் மாறுபடுகின்றன. இவ்வாறான சொற்களைத்தான் நாம் பார்க்கப் போகிறோம்.
* தமிழ் எழுத்துகளில் சில எழுத்துகள் ஒத்த ஒலியுடையன. சிறு/நுண்ணிய ஒலி வேறுபாடு உடையன. அவற்றையே மயங்கொலிகள் என்கிறோம்.
* மயங்கொலிகளை முறையாக ஒலித்துப் பயன்படுத்தும்போது சொற்பொருளில் தெளிவு ஏற்படுகிறது.
* ண–ந–ன, ர–ற, ல–ழ–ள ஆகியன மயங்கொலி எழுத்துகள்.

| மயங்கொலி எழுத்துகள் | | |
|---|---|---|
| ண – ந – ன | ர – ற | ல – ழ – ள |




**பின்வரும் தொடர்களை முறையாகப் படித்துப் பார்ப்போம்.**

அ. ஆற்றில் ஓர் உரல் உருளுது புரளுது.

ஆ. பல்லியைக் கண்ட வள்ளி வழுக்கி விழுந்தாள்.

இ. அடுப்பில் இருப்பது கரி

அம்மா சமைப்பது கறி

காட்டில் இருப்பது புலி

கடையில் இருப்பது புளி

ஈ. கறை படிந்த வேட்டியை ஆற்றங்கரையில் கறைநீக்கி உலர்த்தினர்.

உ. பனியில் பணி செய்யாதே.

ஊ. ஆனி மாதம் அடித்த ஆணி.

எ. கழைக்கூத்தாடி, கலையை நிகழ்த்தி விட்டு களைத்து அமர்ந்தார்.

**சொற்களின் பொருள் அறிவோம்.**

| சொல் | பொருள் | | சொல் | பொருள் |
|---|---|---|---|---|
| ஒலி | சத்தம் | | கலை | ஓவியம், இசை முதலியன |
| ஒளி | வெளிச்சம் | | களை | தேவையற்றது |
| ஒழி | அழித்தல் | | கழை | கரும்பு, மூங்கில் |
| | | | | |
| கரை | ஆற்றின் ஓரம் | | பரவை | கடல் |
| கறை | அழுக்கு | | பறவை | பறக்கும் உயிரினத்தில் ஒன்று |
| | | | | |
| குரல் | வாயால் எழுப்பப்படும் ஒலி | | மரம் | தாவரம் |
| குறள் | குறுகிய செய்யுள் | | மறம் | வீரம் |
| | | | | |
| அணல் | கழுத்து (வாய்ப்புறம்) | | பலம் | உறுதி |
| அனல் | நெருப்பு | | பழம் | கனி |
| | | | | |
| கானல் | பாலைவனம் | | தலை | உடல் உறுப்பு |
| காணல் | காணுதல் | | தளை | கட்டுதல் |

## மதிப்பீட்டுச் செயல்பாடு :

**1. பொருள் தருக.**

| | | | |
|---|---|---|---|
| காணல் | | கானல் | |
| அனல் | | அணல் | |
| பலம் | | பழம் | |
| அறம் | | அரம் | |
| தலை | | தளை | |
| கலை | | களை | |
| கரை | | கறை | |
| பரவை | | பறவை | |

**2. பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

அ. பூனைக்குப் பிடித்தது _____________ (பால்/பாழ்).

ஆ. விண்ணின் துளி _____________ (மலை/மழை).

இ. காட்டில் இருப்பது _____________ (மரம் /மறம்) .

ஈ. மீன் பிடிக்க உதவுவது _____________ (வளை/ வலை).

உ. ஆடு உண்பது _____________ (தழை /தலை).

ஊ. ஓவியம் என்பது ஒரு _____________(களை /கழை /கலை).

எ. மனதில் _____________ கொள்ளல் வேண்டும். (உறுதி /உருதி).

ஏ. ஓணான் மரத்தில் _____________ (ஏரியது /ஏறியது ).

ஐ. நாய் என்பது ஒரு வீட்டு _____________ (விலங்கு /விளங்கு /விழங்கு).

**3. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு சரியான இரண்டு தொடரை எழுதுக.**

(எ.கா. ) வேந்தன் / கேட்டது / குரல் / சொன்னார் / குறள்.

**வேந்தன் குறள் சொன்னார்.**

**வேந்தன் குரல் கேட்டது.**

அ. கண்ணன் / வழியில் / துடித்தான் / சென்றான் / வலியால்.

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

ஆ. குரங்கு / மறத்தில் / தமிழர்கள் / மரத்தில் / சிறந்தவர்கள் / ஏறியது,

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

**4. சொல்லையும் பொருளையும் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. ஒலி | – | வெளிச்சம் |
| ஆ. ஒளி | – | அரசன் |
| இ. இரை | – | ஓசை |
| ஈ. இறை | – | உணவு |

**5. பின்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

ஆனி (மாதம்), ஆணி (சுவரில் அடிப்பது), விலங்கு (உயிரினம்), விளங்கு (திகழ்தல்), தினை (தானியம்), திணை (ஒழுக்கம்)

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

# 16 முழக்கத்தொடர் உருவாக்குதல்

**கற்றல் விளைவு:**

பல்வேறு நோக்கங்கள் மற்றும் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும்போது அதற்கேற்றச் சொற்கள், தொடர்கள், நிறுத்தக்குறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.

**கற்பித்தல் செயல்பாடு:**

1. உரைப்பகுதியைப் படித்து முழக்கத்தொடர்கள் உருவாக்கலாம்.

வாடி வதங்கிய மரங்கள்; வண்ணம் இழந்த இலைகள்; காய்ந்து கருகிய பூக்கள்; வறண்ட பூமி; வற்றிக் கிடக்கும் ஆறு; வெண்பஞ்சு மேகம்; பசுமை இழந்து பாளம்பாளமாக வெடித்துக் கிடக்கும் வயல்வெளிகள்; என்னவாயின? அவற்றின் அழகெல்லாம் எங்கே போயின? அதோ, ஒரு வீட்டின் அருகே தண்ணீர்க்குழாய்! அதில் சொட்டுச்சொட்டாக நீர்! அதனை நிரப்பிக்கொள்ள வரிசைவரிசையாக எத்தனைக் குடங்கள்? அப்பப்பா! இந்தச் சொட்டுநீர் நாளையும் வருமா? வினாக்குறியுடன் சிறுமி!

இப்பத்தியைப் படித்து இதன் மையக்கருத்தை ஒட்டி முழக்கத் தொடர்களை உருவாக்குவோம்.

**(எ.கா.)**

நீரைச் சேமிப்போம்; நீடுழி வாழ்வோம்!

மழைநீரைச் சேமிப்போம்! மண் வளத்தைக் காப்போம்!

வாடிய மரங்கள் வேண்டாம்! வற்றாத நதியே வேண்டும்!

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

மழை பெறுவோம்! உயிர் வளர்ப்போம்!

தண்ணீரைச் சேமிப்போம்! கண்ணெனப் புவிகாப்போம்!


2. பாடலின் பொருள் அடிப்படையில் முழக்கத் தொடர்கள் உருவாக்கலாம்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்

குத்தொக்க சீர்த்த விடத்து" –என்ற குறளின் கருத்தையும்

"ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரையில் வாடி இருக்குமாம் கொக்கு" என்ற மூதுரைப் பாடலின் பொருளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

கொக்கானது தனக்குரிய உணவான மீனைப் பிடிக்கப் பொறுமையுடன் காத்திருந்து சரியான நேரத்தில் வேகமாகச் செயல்பட்டு உணவைப்பெறும். அதைப்போல அறிவுடையோரும் உரியகாலம் வரும்வரை பொறுமையாகக் காத்திருந்து விரைந்து செயலாற்றுவர்.



**மேற்கண்ட கருத்தை மையமாகக்கொண்டு,**

* காலத்தே பயிர்செய்.
* காலம் அறிந்து கடமையாற்று.
* பொன்போன்ற காலத்தில் கண்ணெனக் கடமையாற்றுவோம்.
* காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
* வாய்ப்பைக் கொண்டு வெற்றிகொள்.

– என்றவாறு முழக்கத் தொடர்களை உருவாக்கலாம்.

## மதிப்பீட்டுச் செயல்பாடு :

1. முழக்கத் தொடர்களை நிறைவு செய்க.

மழை நீர் நம் ஒவ்வொருவரின் ______________.

விண்ணின் மழைத்துளி ______________.

காலம் ______________ போன்றது.

2. பத்தியைப் படித்துணர்ந்து முழக்கத்தொடர்களை உருவாக்குக.

இயற்கையின் அங்கங்கள் மலைகள்; மலர்கள் பல கொண்ட நீலவண்ண மலைகள்; பனிமூடிய வெள்ளி மலைகள்; பச்சை மரங்களை ஆடையாய்க் கொண்ட பசுமலைகள்; ஆகாயத்தின் நீலவண்ணமும் பனியின் வெண்மையும் மென்மையும் கலந்த பனிமலைகள் பச்சையம் போர்த்திய துளிர்மலைகள்! இவற்றைப் போன்ற இடங்களுக்குச் சுற்றுலா செல்வது ஒரு பொழுதுபோக்கு! மனத்திற்கு நிறைவையும் அமைதியையும் தரும் இவ்விடங்களில் நாம் என்ன செய்துவருகிறோம்?

நெகிழிப் பைகளில் உணவை எடுத்துச்சென்று உண்டுவிட்டு அவற்றை அங்கேயே தூக்கியெறிந்து விடுகிறோம். பசுமை போர்த்திய மலைகள் இன்று நெகிழி சூழ்ந்து கிடக்கின்றன. இயற்கை குறித்த விழிப்புணர்ச்சியை நாம் இன்னும் பெறவில்லையோ? என நெருடலாக இருக்கிறது!



..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. பின்வரும் தலைப்புகள் குறித்து முழக்கத்தொடர் உருவாக்குக.

* கல்வியின் சிறப்பு
* உடல்நலம் பேணுதல்
* இயற்கையைப் பேணுதல்
* சுற்றுச்சூழல் பாதுகாப்பு
* சேமிப்பின் சிறப்பு
* சிக்கனத்தின் தேவை

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

4. படம் உணர்த்தும் கருத்தை முழக்கத்தொடராக மாற்றுக.



.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................